# செய்யார் தாலூக்கா அசனம்மாபேட்டையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

(ஒரு நிருபர்)

அசனம்மாபேட்டை, ஜூன் 1.

30-5-38 ல் தோழர் தி. அ. ஷண்முக முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் திருவத்திபுரத்திலிருந்து சத்தியாக்கிரகத்திற்குச் செல்லும் தோழர் கே. கோவிந்தன் அவர்களும், அசனம்மாபேட்டை தோழர் சா. சுந்தரனார் அவர்களும் ஆச்சாரியார் ஆணவ ஆட்சியைப்பற்றியும், ஹிந்தியால் விளையும் தீங்குகளைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள் தலைவர் அவர்கள் ஹிந்திப் போரின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்.

பிறகு ஹிந்திப் போருக்குப் பொருள் சேகரிக்கவேண்டியது அவசியமென்றும் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களைப்பாராட்டியும் தோழர் இராஜரத்தினம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.